**R5298**

## TABLES OF THE LAW REPLACED

# நியாயப்பிரமாண பலகைகள் மாற்றப்பட்டன

''வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும் மனஉருக்கமும் நீடிய சாந்தமும்,
மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை.'' – நெகேமியா 9:17

மோசே, இஸ்ரயேல் மற்றும் நியாயப்பிரமாணம் ஆகியவை நிழலாக இருந்ததை பார்க்க தவறுபவர்கள் அவற்றிலிருந்து கிடைக்கிற பாடங்களை பெற்றுக்கொள்ள தவறுகிறார்கள். மோசே இயேசுவுக்கு மாத்திரம் நிழலாக இருக்கவில்லை; ஆனால் பரிசுத்த பேதுரு கூறுவது போல, தலையாகிய இயேசு மற்றும் மகிமையடைந்த சபையும் சேர்ந்த மகிமையான முழுமையான சபைக்கு நிழலாக இருக்கிறார். பரிசுத்த பேதுருவின் வார்த்தைகளாவன: "மோசே பிதாக்களை நோக்கி, உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்." (அப்போஸ்தலர் 3:22, 23)

இயேசு முதலாவது எழுப்பப்பட்டார். பெந்தேகொஸ்தே நாளிலிருந்து சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. தெரிந்துக் கொள்ளப்பட்ட சபையின் முழு எண்ணிக்கையும் கண்டு கொள்ளப்பட்டு, சோதிக்கப்பட்டு, மகிமைக்கு தகுதியானவர் என்று நிரூபிக்கப்படும் போது, இந்த வேலை நிறைவடையும். பிறகு மெய்யான மோசே, தேவனுடன் இணக்கத்துக்குள் திரும்ப வர விரும்புகிற சகல மனுக்குலத்தையும் இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரங்கள் மூலம் குறிப்பிடப்படுகிற அனைவரையும் விடுவிக்கிற மாபெரும் வேலையை ஆரம்பிப்பார்.

பரிசுத்த யாக்கோபு (1:18) சுவிசேஷ யுகத்தின் சபையை, "தம்முடைய (தேவனுடைய) சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்று அறிவிக்கிறார். வெவ்வேறு வழியில் அது முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுகிறது. அது லேவி கோத்திரத்தினால் நிழலாக குறிப்பிடப்படுவது. இந்த லேவி கோத்திரத்தார், பஸ்காவில் மீட்கப்பட்ட இஸ்யேலின் முதற்பேறானவர்களை குறிப்பிட்டார்கள். இந்த முதற்பேறானவர்கள், ஆசாரியர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் என்று பிரிக்கப்பட்டார்கள. ஆசாரியர்கள், கிறிஸ்துவை, பிரதான ஆசாரியரையும் உதவி ஆசாரியரைகளையும் குறிப்பிட்டார்கள். லேவியர்கள் மீதமுள்ள ஜெயங்கொண்டவர்களைக் குறிப்பிட்டார்கள்.

மெய்யான ஆசாரியர்கள் ராஜரீக ஆசாரியர்களாக ஆக்கப்படுவார்கள். ராஜரீக கனங்களினால் உடுத்துவிக்கப்பட்ட மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசு, அவருடைய உடன் சுதந்தரரும், இராஜரீக ஆசாரியர்களுமாகிய உண்மையுள்ள சிறு மந்தையுடன் தம்மை இணைத்துக்கொள்வார். ஜெயம் கொண்ட மீதமுள்ள சபை அங்கங்கள் குறைந்த மகிமையுடையவர்களாக, எனினும் ஆவிக்குரிய சுபாவத்தில் கூட்டுப்பணியாளர்களாக இருக்கிறார்கள். இவர்களின் பிரதானமான வேலை, தேவனுடன் இணக்கத்துக்கு வரவிரும்புகிற உலக ஜனங்களை ஆசீர்வதிப்பதாகும். உலக ஜனங்கள் மீதமுள்ள இஸ்ராயேல் கோத்திரங்களால் குறிப்பிடப்படுகிறார்கள்.

### நியாயப்பிரமாணத்தின் முதற் பலகைகள்

நியாயப்பிரமாணத்தின் முதற்பலகைகள் கர்த்தராலேயே தயார்படுத்தப்பட்டு எழுதப்பட்டன. மனித சிருஷ்டிப்பு எப்படி அவனது சிருஷ்டிகரின் ரூபத்தின்படி உருவாக்கப்பட்டு, தெய்வீக சித்தத்திற்கு முழு இசைவாகவும், தெய்வீக பிராமணத்திற்கு முழுவதும் வெளிப்படையாகவும் இருந்தது என்பதை இது குறிப்பிடுகிறது. ஆதாமுக்கு இன்னும் தயார் படுத்தப்படுதலோ, ஒரு பூரண ஜீவியாக அவருக்குள் இருந்ததைத் தவிர வேறு எந்த பிரமாணமோ தேவையில்லாதிருந்தது.

ஆனால் பாவத்தினால் இந்த பிரமாணம் உடைக்கப்பட்டது. பலவீனமான மனுக்குலம் பாவத்தையும் நீதியையும் சரியானபடி தீர்மானிக்க முடியாதபடி இருக்கிறது. ஆதி பலகைகள் நொறுங்கி, தெளிவற்றதாக வளர்ந்திருக்கிறது. மனிதனுக்கு அவனது அநீதிக்கான சமரசத்தை ஏற்படுத்தவும் பிறகு தேவனுடைய பிரமாணத்தை அவனது மாம்சத்தில் திரும்ப எழுதவும் ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறார்.

இரண்டு நியாயப்பிரமாண பலகைகளையும் தூக்கிப் போடும்படி மோசே அறிவுறுத்தப்பட்டார். இது மகிமையடைந்த கிறிஸ்து (இயேசு + சபை) தெய்வீக பிரமாணத்தை திரும்ப எழுதுவதற்கு மனுக்குலத்தின் இருதயத்தை தயார்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டார் என்பதை குறிப்பிடும். தேவனுடைய பிரமாணத்துக்கு மனிதனை கீழ்ப்படிய தயார்படுத்த அவர்கள் மறுசீரமைப்பை, பாவமும் சீரழிவும் நீக்கப்படுதலை அனுபவித்தல் தேவைப்படுகிறது. இந்த வேலை நிழலில் மோசேக்கும் உண்மைப் பொருளில் கிறிஸ்துவுக்கும் கொடுக்கப்பட்டது.

மோசே இரண்டாவது தடவையாக மலையிலிருந்து கொண்டு வந்த நியாயப்பிரமாண பலகைகள், உடைத்துப்போட்ட முதலாவது பலகைகளைக் காட்டிலும் விநோதமானதாக, வேறானதாக இருந்தன. இரண்டாவது பலகைகளுடன் வந்த போது மோசேயின் முகம் பிரகாசித்தது. அவருக்கு முக்காடு போடுவது அவசியமாயிருந்தது. அதன்பிறகு, ஜனங்களை சந்திக்கும் போது முக்காடு போட்டுக்கொண்டும், தேவனிடம் செல்லும் போது முக்காட்டை நீக்கிவிட்டும் இருந்தார்.

கிறிஸ்து இரண்டாம் வருகையில் மத்தியஸ்தருக்குரிய வேலைய செய்யும் பொழுது, அவரது மகிமை ஒரு முக்காட்டினல் மூடப்பட்டிருக்கும். ஆகையால் உலகம் இயேசுவைக் காணாது என்பதை இது குறிக்கிறது என்று நாங்கள் புரிந்துகொள்ளுகிறோம். இது இப்படியாக அறிவிக்கப்படுகிறது: "இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது,

நீங்களோ என்னைக் காண்பீர்கள்.'' எனினும் சபையானது பூமிக்குரிய சுபாவத்திலிருந்து வானத்துக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்பட்டு, கிறிஸ்துவை மகிமையில் காண தயாராயிருக்கும் என்று அப்போஸ்தர் விளக்குகிறார். ''அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்போம்.'' ஏனெனில் ''நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' ''ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டிருப்போம்.'' ஏனெனில் ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது.'' (1 யோவான் 3:2; 1 கொரிந்தியர் 15:50-52) தர்சு பட்டணத்தானாகிய சவுல் இயேசுவை மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத்திற்கு மேலான அவரது மகிமையில் அவரைக் கண்டதை நாம் நினைவுகூருகிறோம். மூக்காடு நீக்கப்பட்டிருந்தது. அவரை பார்த்து, சவுல் தரையிலே விழுந்து பார்வையை இழந்தான்.

முக்காட்டை (யாத்திராகமம் 34:1,4,28-35) போட்டுக்கொள்ளுவது என்பது, கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில், மனிதர்களுக்கான அவரது மாபெரும் மத்தியஸ்த வேலையை நிறைவேற்றும் போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய மறுசீரமைக்கப்பட்ட பரதீசுக்கு அவர்களது தலைவராகிய, தமது மகிமையை முக்காடிட்டுக்கொண்டு, தமது ஆவிக்குரிய நிலைமையிலிருந்து நேரடியாக மனுமக்களுடன பேசாமல் முக்காட்டின் வழியாக பேசுவார் என்பதை குறிக்கிறது. மனுக்குலம் இயேசுவை இனி பார்க்காமல் இருப்பது, அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். அதற்கு பதிலாக பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்கள் மூலமாக அவரைக் காண்பார்கள். இதைக் குறித்து அவர் அறிவித்தாவது: ''நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்.'' (லூக்கா 13:28)

மனுக்குலம் பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களை அவர்கள் முன்னிருந்ததைப் போல காண்பார்கள் என்று அதற்கு பொருளல்ல. அதைக்காட்டிலும், மனுக்குலம் அவர்களை மனித பூரணத்தில் உயிர்த்தெழுந்தவர்களாக, ஆகையால் பூரணராக, தேவனுடைய ரூபத்தில், மனுக்குலம் அடையப் போவதற்கு முன்னுதாரணமாக இருப்பதைக் காண்பார்கள். மோசே நிழலாக காண்பிக்கப்பட்டிக்கிற மாபெரும் தீர்க்கதரிசியின் வார்த்தைளை கவனிக்கிறவர்கள் மாத்திரமே காண்பார்கள்.

அந்த காலத்தைக் குறித்து பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறதாவது: ''அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவன் (கீழ்ப்படியாதவன்) எவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்.'' (அப்போஸ்தலர் 3:22,23)

## நிழலின் மற்ற அம்சங்கள்

ஆரோனின் ஆசாரியத்துவத்தின் ஆசாரியர்களை அபிஷேகம் பண்ணுதல், இயேசு மற்றும் அவரது ராஜரீக ஆசாரியர்களை அபிஷேகம் பண்ணுவதற்கு முன்னடையாளமாக இருக்கிறது. நிழலில் அபிஷேகத்திற்கும் அர்ப்பணத்திற்கும் முன்பு பலிகள் செலுத்தப்படுவது அவசியமாயிருந்தது போல, உண்மைப் பொருளிலும் அப்படி செய்யப்பட வேண்டும். இயேசு தன்னையே ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. இப்படி ஒப்புக் கொடுத்தது தேவனிடத்தில் தனது பக்தியையும் விசுவாசத்தையும் மரணபரியந்தம் பலியிடுதல் மூலம் காண்பிக்கிறது.

இதே போல கிறிஸ்து பிரதான ஆசாரியராக இருக்கக்கூடிய உதவி ஆசாரியர்கள், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டவர்கள், பலியின் மூலமே அவர்களது பதவிக்கு அர்ப்பணம் செய்ய முடியும். அடையாளமான பிரதான ஆசாரியத்துவத்துக்கு ஒரு காளை பலியாக இருந்தது. ஆனால் உண்மைப் பொருளில் கர்த்தரின் சரீரமே பலியாக இருந்தது. பொருளில் சபையின் மானிட சுபாவமாகிய மாம்சமே பலியாக இருக்கிறது. இப்படியாக பரிசுத்த பவுல், தங்களது பங்கைக் குறித்து சபைக்கு புத்தி கூறும் போது சொல்வதாவது: ''அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.'' (ரோமர் 12:1)

நிழலான பிரதான ஆசாரியன் மற்றும் உதவி ஆசாரியர்களின் விசுவாசத்தை நிரூபித்த அதே பலிகள் ஜனங்களின் பாவ நிவாரண பலிகளாகவும் ஆயின. அதே போல உண்மையான பலிகள் உலகத்தின் பாவங்களை மன்னிப்பதற்கு அடிப்படையாகவும், இப்படியாக தேவனுடைய குறித்த காலத்தில் உலகத்தை நல்லிணக்கத்திற்கு கொண்டு வருவதாகவும் இருக்கும. இவைகள் ''விசேஷித்த பலிகள்'' என்று பரிசுத்த பவுலால் குறிப்பிடப்படுகின்றன. (எபிரேயர் 9:23) வேறு வார்த்தையில் கூறுவோமானால், நிழலில் உள்ளவைகள் எல்லாம் சிறிய அளவிலும் உண்மைப் பொருளுக்கு கீழானதாகவும் இருக்கின்றன. நிழலான மத்தியஸ்தர் நிழலான பலிகளை செலுத்தினார். உண்மையான மத்தியஸ்தர் ''விசேஷித்த பலிகளை'' செலுத்தினார். நிழலான மத்தியஸ்தர் நிழலான இஸ்ரயேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு வழி நடத்தினார். உண்மையான மத்தியஸ்தர் அவரது ஆயிரம் வருட அரசாட்சியில், கல்வாரி பலியினால் மீட்கப்பட்டதும், ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்து போனதுமான, ஆசீர்வாதங்களுக்கும் சலுகைகளுக்கும் ஜனங்களை வழி நடத்துவார்.

## கிருபையும், தயவுமுள்ள தேவன்

நமது தலைப்பு வசனம், தேவனை, வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மகா உருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ள தேவன் என்று வருணிக்கிறது. இருண்ட யுகத்தில் நமக்கு கொடுக்கப்பட்ட விசுவாச பிரமாணம் மூலமாக தேவனுடைய குணலட்சணத்தை, கிறிஸ்தவர்களும் உலகமும் பொதுவாக எவ்வளவு தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கற்பனை பண்ணி பார்ப்பது எவ்வளவு கடினமானதாக இருக்கிறது.

தேவன் தம்முடைய சிருஷ்டிகளை நித்திய காலமாக பேய்களின் கையில் கொடுத்து சித்தரவதை செய்ய

நோக்கங்கொண்டிருக்கிறார் என்ற கருத்து எங்குமிருக்கிற நம்பிக்கையின்மைக்கும் புறஜாதிகளிடையே கிறிஸ்து தடைசெய்யப்படுவதற்கும், காரணமாயிருக்கிறது. சர்வ வல்லவரின் குணலட்சணத்தைக் குறித்த சகோதரர் கேல்வினின் தவறான கருத்தை தற்போது மனுக்குலம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. கேல்வினின் போதனைகளை பிரிஸ்பட்டேரியன் நண்பர்கள் நிராகரித்ததால் முழு உலகமும் சுதந்திரமாக சுவாசிக்கிறது. கேல்வினின் போதனை தெரிந்துகொள்ளப்படாத அனைவரும் நித்திய ஆக்கினைக்கு போவார்கள் என்பதாகும்.

கடந்த காலத்தில் தேவன் தம்முடைய இரக்கம், தயவு ஆகிய குணங்களை, நிழலான வழியில், நிழலான ஜனங்களுக்கு, பாவங்களுக்காக அவர்களை தண்டித்து, ஆனால் மன்னித்து, இன்னும் செல்லவும் மென்மேலும் முயற்சி செய்யும்படியும் அனுமதித்து, வெளிப்படுத்தினார். எனினும் நமது கர்த்தரின் முதலாம் வருகை வரையிலும் தேவன் தமது அன்பையும் இரக்கத்தையும் உலகத்திற்கு முழுமையாக வெளிப்படுத்தவேயில்லை. அந்த மாபெரும் சம்பவத்தில் நாம் வாசிக்கிறதாவது: “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பினதினால், அவர் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்.” “அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான்.”

அந்தக் காலம் வரை பாவமும் மரணமும் நீங்காமல் 4124 வருடங்கள் ஆளுகை செய்தது. தேவன் தம்முடைய குமாரனை அனுப்பியது அவரது மன்னிக்கிற நோக்கத்தின் முதலாவது வெளிப்பாடாகும். ஆனால் அவர் இன்னும் உலகத்தின் பாவத்தை மன்னிக்கவில்லை. தனது குமாரனின் மரணத்தினாலே இதற்கான சரியான ஏற்பாடுகளை செய்திருக்கிறார். தேவனுடைய குறித்த காலத்தில் உலகத்தின் பாவங்கள் நீக்கப்படும். முழு உலகமும் இன்னும் “பொல்லாங்கனுக்குள்” பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைகளாக இருக்கிறது. உலகத்தின் நம்பிக்கை பின்னால் மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான ஆளுகைக்குள் இருக்கிறது. இது மெய்யான தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் ராஜாவாகிய அவரில் மையப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குத்தத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாகிய மேசியா பூமியில் தேவனுடன் நல்லிணக்கத்துக்கு வரவிரும்புகிற மற்றும் கீழ்ப்படிதலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதித்து, உயர்த்தி உதவுவார்.

மகிமையான மேசியாவின் ராஜ்யத்தில், மேசியாவின் மணவாட்டியாகவும் உடன் சுதந்தரராகவும், உடன் ஊழியராகவும் இருக்கும்படியாக சபையை அழைக்கும் வேலை இன்னும் நடந்துக் கொண்டிருக்கிறது. அதற்காகவே நாம் ஜெபித்து, காத்துக்கொண்டிருக்கிறோம். “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக.” அந்த ராஜ்யத்தில் தேவனுடைய இரக்கமும் மன உருக்கமும், அவரது ஞானமும் வல்லமையம் அபரிமிதமாக தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் சாட்சியமளிக்கப்படும்.